கவன ஈர்ப்புகள்

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, 'கள்ளக் குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்புசாகுபடி செய்யும் விவசாயிகளின் கரும்பு பதிவு செய்யப்பட மாட்டாது என்று கூறப்படுவதால், கள்ளக்குறிச்சி, சங்கரபுரம் விஸ்வந்திபுரம் ஆகிய ஒன்றிய பகுதிகளைச் சார்ந்த விவசாயி களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த' அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை இன்னும் அந்தத் துறையிடமிருந்து கிடைக்கவில்லை. விவர அறிக்கை வந்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த அரசி னுடைய பதிலை அளிப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

(39) நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்டுவரும் நட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. உச்சி, கே. கல்லன், ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, "நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவு தேயி லைத் தொழிற்சாலைகளும் நட்டத்தில் இயங்கி வருவது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : தலைவர் அவர் களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் 2 ஏக்கர் முதல் 25 ஏக்கர் வரை சிறு தேயிலை தோட்டங்களை உடைய சுமார் 8,887 சிறு தேயிலை உற்பத்தி யாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளன. இத்தகைய தோட்டங்களிலிருந்து கொண்டு வரப்படும் பச்சை தேயிலைகள் அனைத்தும் ஒரே தரமானதாக இருக்க வாய்ப்பில்லை. எனவே பல்வேறு தரமான பச்சை தேயிலையைக் கொண்டு தயாரிக்கப் படும் தேயிலைத் தூள் முதல் தரமானதாக இருக்காது. ஆனால் டான்டீ மற்றும் தனியார் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்

கவன ஈர்ப்புகள்

[திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்]

சாலைகள் தனக்கு சொந்தமான தேயிலை தோட்டங்களில் நல்ல தரமான ஒரே மாதிரியான பச்சைத் தேயிலையை வளர்த்து அதன் மூலம் தேயிலைத்தூள் தயாரிக்கின்றன. எனவே ஒரே மாதிரியான தரமுள்ள தேயிலைத்தூள் தயாரிக்கின்றன. இதனால் நமது தேயிலைத் தொழிற்சாலைகளில் தயாராகும் தேயிலைத் தூளுக்கு அதிக விற்பனை விலையும் கிடைப்பதில்லை. இது நமது தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் நட்டத்தில் இயங்குவதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

தேயிலைத் தூள் விற்பனை, இதர வியாபார பொருள்களைப் போல் இல்லாமல் உலக சந்தை நிலவரத்தைப் பொறுத்ததாகும். உலக சந்தை விலை குறையும் போது சில சமயங்களில் தேயிலைத் தூள் உற்பத்தி விலையை விட குறைவான விலைக்கு தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளால் விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது. அதே சமயம் சிறு தேயிலை உற்பத்தி யாளர்கள் அளிக்கும் பச்சைத் தேயிலைக்கு குறைந்த பட்சவிலை நிர்ணயித்து வழங்க வேண்டியுள்ளது (Minimum Price). இதனால் ஏற்படும் இழப்பு சமூக இழப்பாகும் (Social loss). இதனை அந்தந்த தொழில் கூட்டுறவு தேயிலை சங்கங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியதாகிறது. பொதுவாக தேயிலைத் தூள் விற்பனை விலையில் உச்சநிலை மற்றும் விலை சரிவு (Boom and depression) என்பது சாதாரணமாக நடைமுறையில் உள்ளன. உச்சநிலை கிடைக்கும் போது அனைத்து நஷ்டங்களும் சரி செய்யப்பட்டு (கடந்த ஆண்டு நஷ்டங்கள் உட்பட நிவர்த்தி செய்யப்பட்டு) சங்கங்கள் லாபகரமாக இயங்கும். இத்தகைய நிலை 1984–85ல் ஏற்பட்டது. ஆனால் மீண்டும் விலைச் சரி வின் காரணமாக சங்கங்கள் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன. தேயிலைத் தூளுக்கு நல்ல விலை கிடைக்கவும் சிறு தேயிலை உற் பத்தியாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும் அதன் மூலம் சங்கங்களை லாபகரமாக இயக்கவும் அரசினால் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அனைத்துத் தேயிலைக் கூட்டுறவு தொழிற்சாலைகளுக்கும் அரசாங்கம் அதிகப் பங்குத் தொகை ஏற்பதோடு ஒவ்வொரு தேயிலைத் தொழிற்சாலைக்கும் கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகைக்கான வட்டியை ரத்துசெய்ய முன்வருமா என்பதையும், அந்தத் தேயிலைத் தொழிற்சாலை களில் உற்பத்தியாகும் தேயிலைத் தூள்களை, மார்க்கட்டிங் வசதி செய்வதற்கு 4, 5 புரோக்கர்களை நம்பி நடக்கிறது. அவர்கள் தங்களுடைய பையர்ஸ் மார்க்கெட்டாக உப யோகப்படுத்துகிறார்களே தவிர செல்லர் மார்க்கெட்டாக அங்கு இடமில்லை. ஆகவே அந்த புரோக்கர்களை நிறுத்திவிட்டு, அரசாங்கமே நேரடியாக அந்தத் தேயிலைத் தூள்களை விற் பதற்கு ஏற்பாடுகள் செய்ய முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

கவன ஈர்ப்புகள்

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : தலைவர் அவர்களே தொடர்ந்து பல தொழிற்சாலைகள் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன என்ற காரணத்தினால், புதிய முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. தென்னிந்திய தேயிலைத் தூள் ஏற்றுமதி உரிமையை வழங்கக் கோரி மத்திய அரசுக்கு அமைச்சரவர்கள் மூலமாக நேர்முகக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தாய் சங்கமான, இன்கோசொவ் மூலமாக நேரடியாக ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மூன்றாவதாக சந்தையில் நல்ல விலை கிடைக்க தேயிலை புரோக்கர் நிறுவனம் ஒன்று நிறுவி, அங்கே நமது தேயிலை மற்றும் டான்டீ தேயிலையை தனி புரோக்கர்கள் மூலமாக விற்பனை செய்ய நமது அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல், இதற்கு முன்னாலே 4, 5 புரோக்கர்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. இப்போது அதை மாற்றி, தொழில் வணிகத் துறை இயக்குநர் அவர்களுடைய தலைமையிலே,

Managing Director Incoserve

Managing Director; Tantea

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மூவர் கொண்ட ஒரு குழுவை நியமித்து தேயிலை புரோக்கிங் நிறுவனம் என்ற அமைப்பை நிறுவி அதன் மூலமாக விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

(40) கீழ்பவானி அணையிலிருந்து கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் விடுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ச. பாலகிருஷ்ணன், டாக்டர் அ. பொன்னுசாமி, கா. செ. பழனிச்சாமி, பு. கோ. நாராயணன், துரை ராமசாமி, கு. அ. செங்கோட்டையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பெரியார் மாவட்டம், கீழ்பவானி அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் நான்கு முறை தண்ணீர் விடப்